(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 5ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து தான் பயணம் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி வாகனம் 4ம்எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்டதாகும். மேற்படி 4ம்எதிர்மனுதாரர் தலைகவசம் அணிந்து மெதுவாக தான் ஒட்டி சென்றார் என்றால் சரிதான். என் மீது மோதிய வாகனம் இருசக்கர வாகனம் ஆகும். என் மீது மோதிய வாகனத்தை ஒட்டி வந்த 1ம் எதிர்மனுதாரர் மீது தான் தவறு என்றால் சரிதான். அவர்மீது தான் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நான் பயணம் செய்த வாகனத்திற்கு காப்பீடு சான்றுபடி பின்னால் அமர்ந்து செல்பவருக்கு காப்பீடு பெறப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் 5ம்எதிர்மனுதாரரிடம் இருந்து இழப்பீடு பெற முடியாது என்றால் சரியல்ல. என் மீது மோதிய நபர்களிடம் இருந்து தான் இழப்பீடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் மீது தான் குற்றபத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். குற்ற வழக்கு பற்றி எனக்கு தெரியாது. என் வருமானம், வேலை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தற்போது நான் எந்தவேலை செய்து வருகிறேன் என்றால் வேலை எதுவும் செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் அதிக இழப்பீடு பெற வேண்டி பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம்எதிர்மனுதாரர் தான் விபத்திற்கு காரணம் என்பதால் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் மட்டும் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. 5ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.